வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**S.C.No. 203 / 2024**

வழக்கு சாட்சி **PW 13**

1873-ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.அழகுலெட்சுமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.வெங்கடாசலபதி | தொழில் | : காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : வரதராஜன் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : திண்டுக்கல் | வயது | : சுமார் 54 |
| தாலுக்கா | : திண்டுக்கல் | நாள் | : 28.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

(1 மற்றும் 2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன்னிலையாகியுள்ளார்கள்.)

முதல் விசாரணை:

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், நகர் வடக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் பழனிச்சாமி மகன் பெருமாள் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் தன்மைபடி அம்பிளிக்கை காவல் நிலைய குற்ற எண்.73/2022 என்ற குற்ற எண்ணில் இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 307 ன் கீழாக முதல் தகவல் அறிக்கையை அ.சா.10 காவல் உதவி ஆய்வாளர் சவடமுத்து என்பவர் பதிவு செய்துள்ளார். 10.06.2021-ம் தேதி இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். கடந்த 04.06.2021-ம் தேதி 22.00 மணியளில் அம்பிளிக்கை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சவடமுத்து நிலைய பொறுப்பில் இருந்த போது ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த நாகப்பன்பட்டியை சேர்ந்த பழனிச்சாமி மகன் பெருமாள் என்பவரை விசாரித்து அவர் கொடுத்து வாக்குமூலத்தை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். சும்பவ இடம் சென்று சம்பவ சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், வாக்குமூலம் பதிவுசெய்தும் பின்னர் எதிரிகள் ரவிக்குமார், மணிகண்டன் ஆகியோர்களை 05.06.2021ம் தேதி 05.00 மணியளவில் கைது செய்தும், ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தும் வழக்கின் தடைய சொத்தான கத்தியை அத்தாட்சியில் கைப்பற்றியும், எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், உதவி ஆய்வாளர் வந்துள்ளார். அதன்பிறகு 10.06.2022ம் தேதி இவ்வழக்கை புலன் விசாரணைக்காக சம்பவ இடம் சென்று பார்வையிட்டதில் ஏற்கனவே சார்பு ஆய்வளாரால் விசாரணை செய்த போது சொன்ன படியே என்னிடமும் சாட்சிகள் கூறியதால் நான் தனியாக சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அதன்பின்னர் வழக்கின் சட்டப்பிரிவுகளை அன்றைய தினமே இ.த.ச. பிரிவுகள் 294(பி), 342, 307 ஆகிய பிரிவுகளில் இருந்து இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 307 உ/இ பிரிவு 34 இ.த.ச படி சட்டப்பிரிவு மாறுதல் செய்து மாறுதல் அறிக்கை தயார்

செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13. பின்னிட்டு வழக்கு சொத்தை ஒட்டன்சத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 23.06.2022-ம் தேதி புலன் விசாரணைக்காக ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவமனைக்கு சென்று இவ்வழக்கில் காயம்பட்ட பெருமாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். புகார்தாரரான அ.சா.1 என்பவரிடம் அன்றையதினமே மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 23.06.2022-ம் தேதி இ.த.ச பிரிவுகள் 294(பி), 342, 307 உ/இ 34 ஆகிய பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:

போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.28 18:10:16 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்